தமிழகச் சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1967, ஜூன் 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் 'வினாக்கள், விடைகள்'. உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்கள் களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

வினா எண்கள் 83, 93 தள்ளி வைக்கப்படுகின்றன.

தமிழ்த் துணைப் பேராசிரியர்கள்.

*** 94 வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசினர் கல்லூரிகளில், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு மட்டும் பேராசிரியர் பதவி உயர்வு தரும்போது அதே போன்று பணியாற்றும் தமிழ்த் துணைப் பேராசிரியர்களுக்கு பேராசிரியர் உயர்வு தராத காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த கேள்வியின் அடிப்படை அனுமானம் சரியல்ல. தமிழகக் கல்வித் துறையின்கீழுள்ள பணியாளர்த் தொகுதியிலுள்ள தமிழ்த் துணைப் பேராசிரியர்களும் ஆங்கிலத் துணைப் பேராசிரியர்களைப் போலவே காலம் நேரிடும்போது தமிழ்ப் பேராசிரியர்களாக பதவி உயர்த்தப்பட்டு வருகிறார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, புதிதாகத் தொடங்கப் பட்டிருக்கிற அரசினர் கல்லூரியில் தமிழுக்குப் பேராசிரியர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றி விவரம் தெரியவில்லை. இப்போது தமிழில் பேராசிரியர்கள் 21 பேர்களும் துணைப் பேராசிரியர்கள் 90 பேர்களும், ஆங்கிலத்தில் 26 பேராசிரியர்களும் 115 துணைப் பேராசிரியர்களும் உள்ளார்கள். ஆகையால், ஆங்கிலத் துறையிலே எவ்வாறு உயர்த்தப்படுகின்றதோ, அதுபோன்றுதான் தமிழ்த் துறையிலேயும் உயர்த்தப்படுகிறார்கள். தமிழ்ப் பேராசிரியர் கள் எல்லாக் கல்லூரிகளிலும் வைத்துக்கொள்ளவேண்டுமென்ற யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அவைத்தலைவர் அவர்களே, ஆங்கிலப் பேராசிரியர்களுக்கும் தமிழ்ப் பேராசிரியர்களுக்கும் சம்பளம் ஒரே அளவில் இருக்கிறதா அல்லது சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறதா ? அவ்வாறு இருப்பதற்குக் காரணம் என்ன ? அதைத் தவிர்ப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மன்றத் தலைவர் அவர்களே, உயர் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்கள், இரண்டாவது நிலைத் தமிழ் ஆசிரியர்கள் என்ற இரண்டு பிரிவாகப் பிரித்திருப்பதால் அவர்கள் முழு தகுதி பெற்ற தமிழ் ஆசிரியர்களாக எல்லோரும் பணியாற்ற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகையால் அப்படிப் பிரித்திருப்பதை நீக்கி, பயிற்சி பெற்றோ, பெறாமலோ பணி யாற்றும் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் போல் அவர்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கருத்து கவனத்தில் கொள்ளப்பட்டு ஆராயப்படும்போது கவனிக்கப்படும்.

புதுக் கல்லூரிகள் துவக்கம்.

*95 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :**
திரு. கரு. சீமைச்சாமி : } மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணையும் சட்டக் கல்லூரி ஒன்றை அரசு மதுரை நகரத்தில் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : மதுரைக்குச் சட்டக்கல்லூரி அவசியம் என்று உணர்ந்து இனிமேலாவது அதைச் சீக்கிரம் தொடங்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரைப் பல்கலைக்கழகத்தை ஒட்டி ஒரு சட்டக்கல்லூரியை ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை இப் பொழுது மதுரை வழக்கறிஞர் சங்கத்திடமிருந்து வந்திருக்கிறது. ஆகையால் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்தவேண்டுமென்ற உணர்வு அரசுக்கு இருந்தாலும் அதனுடைய ஆண்டு நிர்ணயம் பற்றிய கருத்துக் களை பொருத்தும், மற்றவைகளைப் பொருத்தும் இந்திய பார் கவுன்சில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிற காரணத்தாலும் அது வந்த பிறகு கவனித்துக் கொள்ளலாம் என்ற கருத்து இருக்கிறது. அது கிடைத்த தற்குப் பிறகு இதுபற்றி ஆலோசிக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : இப்பொழுது இல்லையென்று சொன்னார்கள். மதுரையிலே ஒரு ஹைகோர்ட் வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கனவே இருக்கிறது. அதற்கு முன்னோடியாகச் சட்டக் கல்லூரியை ஆரம்பித்தால் நல்லது. ஆகையால், அதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. சட்டக் கல்லூரி வேண்டுமென்ற உணர்வு அரசாங் கத்திற்கு இருக்கிறது. ஆகையால் இந்திய அரசின் கணக்கும், விதிமுறை களும் வந்ததற்குப் பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the full strength of students that have got to be admitted in the Law College, Madras is not filled up and sufficient number of students are not forthcoming and many seats are kept vacant every year ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றிய விவரம் இல்லை.